**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி : 05.08.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 6.7 சதவிகிதம் வளர்ச்சியடையும் என, ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகளில், வங்கியாளர்களின் டிஜிட்டல் கணக்குப் பதிவேடுகள், சாட்சியமாக ஏற்கப்படுவதை அனுமதிக்கும் மசோதா, இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழக பொருளாதாரத்தை, 2031ஆம் ஆண்டிற்குள் 1.5 ட்ரில்லியன் டாலர் மதிப்பிற்கு உயர்த்த, தவெக அரசின் முதலாவது பட்ஜெட்டில், இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னேறிய இந்தியாவை உருவாக்க, முதலில், போதையில்லா பாரதத்தை உருவாக்குதல் அவசியம் என்று, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

*ரிசர்வ் வங்கி – 1 (08)*

நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.7 சதவிகிதம் வளர்ச்சியடையும் என ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது. ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா இன்று மும்பையில்,

பணக்கொள்கை குழுவின் முடிவுகளை வெளியிட்டு பேசுகையில் இதை தெரிவித்தார். நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்திய பொருளாதாரம், எதிர்பார்க்கப்பட்டதை விட நல்ல முறையில் செயல்பட்டுள்ளதாக அவர் கூறினார். ரிசர்வ் வங்கி ஆளுநரின் பேட்டி குறித்து கூடுதல் விவரங்கள் ... (வாய்ஸ்)

*ரிசர்வ் வங்கி – 2 வாய்ஸ் (18)*

(வாய்ஸ்)

பணக்கொள்கை குழுவின் முடிவுகளின்படி ரிசர்வ் வங்கி இதர வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதம், மாற்றப்படாமல், தற்போதுள்ள அதே அளவில், 5.25 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பண வீக்கம் குறித்த ரிசர்வ் வங்கியின் கணிப்பு, 5.1-லிருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் பணவீக்கத்தில் ஏற்பட்ட உயர்வுக்கு, உணவு மற்றும் எரிபொருள் விலை உயர்வுதான் முக்கிய காரணமே தவிர, சந்தை தேவையில் பரவலான நெருக்கடி எதுவும் இருக்கவில்லை என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் கூறினார். மேற்காசிய பிணக்குகளால் உலக அளவில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும், வலுவான ஏற்றுமதி, நிலையான முதலீடுகள் போன்ற அனுகூலங்களின் அடிப்படையில் இந்தியப் பொருளாதாரம் வலுவாகவே நீடிப்பதாக அவர் மேலும் கூறினார். கேள்வி ஒன்றுக்கு திரு. மல்ஹோத்ரா பதிலளிக்கையில் பாலிமர் ரூபாய் நோட்டு தொடர்பான உத்தேசங்கள் உரிய காலத்தில் நிறைவேறினால் அடுத்த நிதியாண்டின் ஆரம்பத்திலிருந்து, பாலிமர் ரூபாய் நோட்டுகள் புழக்கத்திற்கு வரக்கூடும் என்றார்.

*நிர்மலா சீதாராமன் (06)*

நீதிமன்ற வழக்குகளில், வங்கியாளர்களின் கணக்கு பதிவேடுகள், நவீன எலக்ட்ரானிக் மற்றும் டிஜிட்டல் வடிவத்திலும், சாட்சியமாக ஏற்கப்படுவதை அனுமதிக்கும் மசோதா, இன்று மக்களவையில், எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையிலேயே, விவாதமின்றி நிறைவேற்றப்பட்டது. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் முன்னதாக இம்மசோதாவை அவையில் கொண்டு வந்தார்.

*நீதிபதிகள் மசோதா (08)*

உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் எண்ணிக்கையை உயர்த்த, கடந்த திங்கட்கிழமை மக்களவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா, இன்று மாநிலங்களவையில் விவாதங்களுக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டது. மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், முன்னதாக, இம்மசோதாவை அவையில் கொண்டு வந்தார். உச்ச நீதிமன்றத்தில், தலைமை நீதிபதி அல்லாத நீதிபதிகளின் எண்ணிக்கையை, 33 லிருந்து 37ஆக உயர்த்தி, கடந்த மே மாதம் குடியரசு தலைவர் பிறப்பித்த அவசர சட்டத்திற்கு மாற்றாக, இம் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

*விலைவாசி (12)*

நாட்டில், 41 உணவுப் பொருட்களின் அன்றாட விலை நிலவரங்களை, 579 விலைக் கண்காணிப்பு மையங்கள் மூலம், அரசு கண்காணித்து வருவதாக, மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. பி.எல். வர்மா தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் அவர் இதை தெரிவித்தார். மேற்காசிய பிணக்குகளுக்கு இடையிலும் இந்தியாவில் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளின் விலை விகிதங்கள் ஸ்திரமாகவே உள்ளதாக அமைச்சர்

கூறினார். மேற்காசிய பிரச்சனை தொடங்கிய உடனேயே இந்தியாவின் அதன் தாக்கங்களை மதிப்பிட, அரசு, 7 அதிகாரக் குழுக்களை அமைத்து, நிலவரங்களை சரிப்- படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*எல். முருகன் (12)*

திரைப்படங்கள் திருட்டு வீடியோவாக வெளியிடப்படுவதையும், டெலிகிராம் போன்ற இடைமுக செயலிகள் இதற்குப் பயன்படுத்தப் படுவதையும், சட்டம் மற்றும் அமைப்பு ரீதியில் தடுப்பதற்கான வசதிகளை அரசு வலுப்படுத்தி இருப்பதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார். 2021ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளின்படி, நீதிமன்ற உத்தரவு அரசு நோட்டீஸ் மூலம் திருட்டு வீடியோ குறித்து தெரியவந்தவுடன், இடைமுக செயலிகள் அவற்றை நீக்குதல் கட்டாயம் என்று, அவர் இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். இந்திய திரைப்பட மரபுகளை பாதுகாத்து, இந்திய திரைப்படங்களை உலக அளவில் பரப்ப ஏதுவாக, DC-DFC திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக மற்றொரு கேள்விக்கான பதிலில் அமைச்சர் கூறினார்.

*முர்மு ஏலம் (10)*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது 3 நாள் ஒடிஷா பயணத்தின் கடைசி நாளான இன்று பெர்ஹாம்பூர் அருகிலுள்ள தபலேஷ்வர் கோவிலில் வழிபட்டார். முன்னதாக கோபால்பூரிலுள்ள ராணுவ வான் பாதுகாப்புக் கல்லூரிக்கும் அவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதற்கிடையே, அரசு விழாக்களின் போது குடியரசு தலைவருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களை, இ-உபஹார் இணையதளம் மூலமாக

ஏலம் விடும் நடைமுறைகளை, குடியரசு தலைவர் மாளிகை, இன்று முதல் தொடக்கியுள்ளது. ஏலம் மூலமாக கிடைக்கும் பணம் முழுவதும், சமூக நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*தமிழ்நாடு பட்ஜெட் -1 (18)*

தமிழகத்தில் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையிலான தவெக அரசின் முதலாவது பட்ஜெட்டை, மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன், இன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். தமிழக பொருளாதாரத்தை, 2031ஆம் ஆண்டிற்குள் 1.5 ட்ரில்லியன் டாலர் மதிப்பிற்கு உயர்த்தவும், அடுத்த 15 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு 9 சதவிகித வளர்ச்சி விகிதத்தை பராமரிக்கவும், இந்த பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 78 ஆயிரத்து 324 கோடி ரூபாய் பற்றாக்குறை காட்டும் இந்த பட்ஜெட்டில் தமிழக அரசின் நிலுவைக் கடன், 10.43 லட்சம் கோடி ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்ட, தமிழக அரசின் பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், திட்ட விளைவுகள் குறித்தும் அரசுக்கு அறிவுரை வழங்க திரு. எம்.எஸ். அலுவாலியா தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவுகளில் கசிவுகளைத் தவிர்ப்பதன் மூலம் அரசின் நிதிச்சுமையைக் குறைக்க பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசுத் துறைகளிலும், சிவப்பு நாடா நடைமுறைகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் திரு. மரிய வில்சன், பட்ஜெட் உரையில் தெரிவித்தார்.

*தமிழ்நாடு பட்ஜெட் -2 (06)*

தமிழக அரசின் பட்ஜெட்டில், சுகாதாரம், வீட்டு வசதி, மகளிர் மேம்பாடு, முதியோர் பராமரிப்பு, கல்வி, தொழில், வேளாண்மை உள்ளிட்ட துறைகள் தொடர்பாக, பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பசுமை பரப்பை அதிகரிக்கவும், அனைத்து துறைகளிலும், நீடித்த அடிப்படையில் வளங்குன்றா நடைமுறைகளை கடைபிடிக்கவும், முக்கியத்துவம் அளிக்கப்படும் என பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பல்கலைக்கழகம் – 1 வாய்ஸ் (16)*

முன்னேறிய இந்தியாவை உருவாக்க, முதலில், போதையில்லா பாரதத்தை உருவாக்குதல் அவசியம் என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார். துடிப்பும் மன உறுதியும் கொண்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்தே இதை சாதிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்நோக்கம் தொடர்பான பல்வேறு பணிகளில் ஈடுபட ஏதுவாக, மத்திய அரசின் மை-பாரத் இணைய தளத்தில் இளைஞர்களை பதிவு செய்ய, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இளைஞர்களுடன் கலந்துரையாடினார். மை-பாரத் இணையதளம், இளைஞர்களின் திறமைகளை தேசிய அளவில் எடுத்துச் செல்வதற்கான மேடை என்றும், நாட்டின் பல்வகை கலாச்சாரத்தை இளைஞர்கள் புரிந்து கொள்ள இதனால் வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். புதுச்சேரி பல்கலைக்கழக மாணவர்கள், போதை ஒழிப்பு பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, போதையில்லா சமுதாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். துணை நிலை ஆளுநரின் உரையிலிருந்து ஒரு பகுதி…

(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)

*பல்கலைக்கழகம் – 2 (04)*

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மாநாடு மற்றும் கலாச்சாரக் கூடத்தில் நடைபெற்ற மை-பாரத் பதிவு முகாமின் தொடக்க விழாவில் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் பிரகாஷ் பாபு, மை-பாரத் துணை இயக்குநர் திரு. திரவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*தாய்ப்பால் (11)*

உலக தாய்ப்பால் வாரத்தை ஒட்டி புதுச்சேரி ஜிப்மரில், பாரம்பரிய வில்லுப்பாட்டு மூலமான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுப்பதன் அவசியம் குறித்தும், முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், 2 வயது மற்றும் அதற்கு மேல் தாய்ப்பாலுடன் சேர்த்து சத்தான துணை உணவுகளை வழங்குவதன் தேவை குறித்தும் இந்நிகழ்ச்சியின்போது எடுத்துக் கூறப்பட்டது. ஏனாமில், மிஷன் சக்தி இயக்கம் சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆயுஷ்மான் ஆரோக்ய மந்திர் மருத்துவர்கள் கலந்து கொண்டு, தாய்ப்பாலின் அவசியம் குறித்து தாய்மார்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

*மாஹி (08)*

மாஹேயில், குடியிருப்போர் நலச் சங்க பிரதிநிதிகளுடன் அதிகாரிகள் இன்று ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தி, குடியிருப்பு பகுதிகளில், தெருநாய்களுக்கு உணவளிக்க தனி இடம் ஒதுக்கும் முடிவை அறிவித்தனர். இது அல்லாத மற்ற இடங்களில் தெரு நாய்களுக்கு உணவளித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நகராட்சி மேலாளர் திரு.பிரவீண் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*வானிலை (14)*

இன்று மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், சென்னை, காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால்

பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும், வரும் 11ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, காஞ்சீபுரம் மாவட்டம், கொட்டவாக்கத்தில், 10 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. புதுச்சேரி மாவட்டம் திருக்கனூரில் 7 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

*கொரியா மாஸ்டர்ஸ் (08)*

தென் கொரியாவில் நடைபெறும் கொரியா மாஸ்டர்ஸ் பேட்மின்டன் சாம்பியன் பட்டப் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் தான்வி ஷர்மா, ஸ்ரீயன்ஷி வாலிஷெட்டி, ஈஷாராணி பரூவா ஆகியோர், முறையே, சீனா, தாய்பே, மற்றும், தென் கொரிய வீராங்கனைகளைத் தோற்கடித்து, 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சோனாலி சிங் – ரித்திகா தாக்கர் இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் கரகா – பிரித்வி ராய் இணையும், 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

*வனம் கூட்டம் (08 )*

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் இன்று புதுடெல்லியில், தமது துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவின் கூட்டத்தை, தலைமையேற்று நடத்தினார். வனவிலங்குகளுக்கும்,

மனிதர்களுக்கும் இடையிலான பிணக்குகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தரவுகளின் அடிப்படையில் இதற்கான உத்திகளை உருவாக்க, தனி இணையதளம் ஒன்றையும் தகைசால் மையம் ஒன்றையும், அரசு செயல்படுத்தி வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தலைப்புச் செய்திகள்

நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 6.7 சதவிகிதம் வளர்ச்சியடையும் என, ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகளில், வங்கியாளர்களின் டிஜிட்டல் கணக்குப் பதிவேடுகள், சாட்சியமாக ஏற்கப்படுவதை அனுமதிக்கும் மசோதா, இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழக பொருளாதாரத்தை, 2031ஆம் ஆண்டிற்குள் 1.5 ட்ரில்லியன் டாலர் மதிப்பிற்கு உயர்த்த, தவெக அரசின் முதலாவது பட்ஜெட்டில், இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னேறிய இந்தியாவை உருவாக்க, முதலில், போதையில்லா பாரதத்தை உருவாக்குதல் அவசியம் என்று, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RSS/KR/VM.